# அழகப்பாபல்கலைக்கழகம்,காரைக்குடி

(தேசியத் தரநிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுமதிப்பீட்டில் A+ (CGPA : 3.64) தகுதிபெற்றது)

நாள்: 12.03.2018

காரைக்குடி அழகப்பாபல்கலைக்கழக இளைஞர் நலன் மற்றும் மேம்பாட்டு மையம் மற்றும் நுண்கலைத்துறை ஆகியன இணைந்து நடத்திய தென்மண்டலப் பல்கலைக்கழகங்களுக்கிடையேயான “உருமி - 2018“ என்ற தலைப்பிலான மூன்று நாள் நாட்டுப்புறக் கலைவிழா மார்ச் 9-ஆம் தேதி முதல் 11-ஆம் தேதி வரை பல்கலைக்கழக லெ.சித.லெ. பழனியப்பச் செட்டியார் நினை வரங்கில் நடைபெற்றது.




அழகப்பா பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரா. சொ. சுப்பையா அவர்கள் தலைமையுரையாற்றினார். அவர் தனது உரையில், இசையும் கலையும் உலகளாவிய பொது மொழியாகும். இதனை இனம், மொழி, நாடு என்ற வரையறைகளுக்குள் கட்டுப்படுத்த முடியாது. இவை இரண்டும் நுட்பமான தன்மை மற்றும் திறமைகளை உள்ளடக்கியவை என்றும், மனிதனை மற்ற உயிரினங்களிடமிருந்து தனித்துக் காட்டுவதுகலை ஆகும் என்றும் கூறினார். ஆகவேதான் தமிழர்கள் பழங்காலம் தொட்டே கலாச்சாரத்தை பரப்பவும், மனிதப் பண்புகளை வளர்க்கவும் ,சையையும; ,கலையையும் கருவிகளாக பயன்படுத்தினர். அனைத்து விதமான கலைகளின் ஊற்றுக்கண்ணாக விளங்குவது நாட்டுப்புறகலைகளாகும் என்றும், குறிப்பாக இந்திய நாட்டுப்புற கலைகள் வாழ்வியலில் இரண்டறக் கலந்த கலைப் பொக்கி'ங்களாகும் என்றும் கூறினார். நாட்டுப்புற கலைகளில் நடனம் , இசை, வீதிநாடகம் எனப் பலவகைகள் உள்ளன. இவைகள் மக்களின் மகிழ்ச்சி ,வீரம; ,வெற்றி, தோல்வி, செழுமை, வறுமை என அனைத்துவிதமானப் பரிமாணங்களை வெளிப்படுத்துவதால் இக் கலைகள் பேணி பாதுகாக்க படவேண்டியவை. இந்த நோக்கிலேயே உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து வருவோர்க்கெல்லாம் தமிழ் மொழியை, பண்பாட்டை , நாகரிகத்தை, கலைநயங்களை, கல்வியுடன் மாணவர்களுக்கு கற்பிக்கவே அழகப்பாபல்கலைக்கழகம் நுண்கலைத்துறை மற்றும் தமிழ் பண்பாட்டு அருங்காட்சியகம் ஆகியவற்றை உருவாக்கியுள்ளது என்றார். இதன் தொடர்ச்சியாகவே, நம் தென்னிந்திய நாட்டுப்புறக் கலைசெல்வங்களை வளர்க்கவும் இக்கால இளைஞர்களிடம் கொண்டு செல்லவுமே இந்த மூன்று நாள் தென்னிந்திய பல்கலைக் கழகங்களுக்கிடையேயான நாட்டுப்புறக் கலைவிழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று பேசினார்.




இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற திருமதி சுனேத்ரா பண்டிட், Director, Lime Light Acting Academy- Bangalore, தமது சிறப்புரையில் மாணவர்கள் ஆர்வத்துடன் கலைகளை கற்க வேண்டும் என்றும் தமிழ் கலாச்சாரத்தின் தொன்மைகளையும் சிறப்பினையும் ஒரு போதும் மறந்து விட கூடாது என்றும் கூறினார். மேலும், அவர் கலைகள் ஒவ்வொன்றும் நமது கண்ணெனக் காக்கப்பட வேண்டியவை என்றும், மாணவர்கள் எதைச் செய்தாலும் முழு ஈடுபாட்டுடனும் ஆர்வத்துடனும் செயல் படுதல் வேண்டும் எனவும் கூறினார்.

இந்நிகழ்வில், பல்கலைக்கழக தனி அலுவலர் பேராசிரியர். ஏ.பாலசந்திரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். அழகப்பாபல்கலைக்கழக இளைஞர் நலன் மற்றும் மேம்பாட்டுமைய இயக்குநர் மற்றும் உருமி - 2018 நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் முனைவர் பூ.தர்மலிங்கம் அவர்கள் வரவேற்புரையாற்றினார். உருமி - 2018 நிகழ்வின் செயலாளர் உதவிப் பேராசிரியர் முனைவர். ஆ. ஜோதிபாசுஅவர்கள் நன்றியுரையாற்றினார். இவ்விழாவில் 14 பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த 250 மாணவ, மாணவிகள் பங்கு பெற்றனர்.

இந்நிகழ்ச்சியின் நிறைவுவிழா, மார்ச் 11-ஆம் தேதியன்று மாலை 4:30 மணியளவில் நடைபெற்றது. பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சொ.சுப்பையா அவர்கள் தலைமையுரையாற்றினார். இந்நிகழ்வில், பல்கலைக்கழக பதிவாளர் பேரா ஹா. குருமல்லேஷ் பிரபு மற்றும் தனி அலுவலர் பேராவி.பாலச்சந்திரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினர். சிறப்பு விருந்தினராக, பிரபல திரைப்பட பின்னணிப் பாடகர் திரு. வேல் முருகன் கலந்துகொண்டு நிறைவுரையாற்றினார். அவர் தமது உரையில், ”மண் மனம் மாறாமால், வாழ்வோடு இரண்டறக் கலந்துள்ளதாலேயே நாட்டுப்புறக் கலைகள் என்றும் அழியாமல் உள்ளன என்றும், வாழ்வியல் கலந்தகலாச்சாரத்தை ஒரு தலைமுறையிலிருந்து அடுத்தத் தலைமுறைக்கு எடுத்துச் செல்வதற்கு நாட்டுப்புறக் கலைகள் தான் நம்மிடமுள்ள ஒரே கருவி” என்றும் கூறினார்.

கேரள மாநில, கன்னூர் பல்கலைக்கழக குழுவினர் ஒட்டு மொத்தச் சாம்பியன் பட்டத்தைப் பெற்றனர். அழகப்பாபல்கலைக்கழக குழுவினர் இரண்டாம் இடத்தைப் பெற்றனர்.

பேரா. ஹா. குருமல்லேஷ் பிரபு

பதிவாளர்